


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 மேழும் நல்லோரை சித்திரைத் திங்கள் 22ம் நாள் நிறைமதி (05-05-2023 வெள்ளிக்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## சீர்காழி சட்டைநாதர் சுவாமி நன்னீராட்டு விழா



அருள்மிகு சீர்காழி சட்டைநாதர் சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா வைகாசித் திங்கள் வளர்பிறை 10ம் நாள் (மே 24) நிகழவிருக்கிறது.

# திருமுறை ஓதியதன் பயனாக சீர்காழியில் அற்புதம்

# சிலைகள், தேவாரச் செப்பேடுகள் வெளிப்பட்டன



முப்பத்தியிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சீர்காழி அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்நீராட்டுப் பெருவிழா செய்யவேண்டுமென்ற திருவருளின் வெளிப்பாட்டில், தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், கோயில் சீர்செய்யும் பணியினை ஆரம்பித்தார்கள். அத்துடன் மட்டுமல்லாமல், குருமணிகள் இந்தக் திருக்குட நன்நீராட்டை முன்னிட்டு, திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த திருஎழுக்கூற்றிருக்கைப் பதிகத்தினை உலகத்தமிழர்கள் அனைவரும் சேர்ந்து ஒருகோடி முறை ஓதவென்றும் என்ற அறிவிப்பினை விடுத்தது மட்டுமல்ல அதனை செயப்படுத்தியும் வந்தார்கள்.

எதிர்வரும் வைகாசித் திங்கள் 10ம் நாள் நடைபெற வுள்ள திருக்குட நன்நீராட்டுப் பெருவிழாவிற்கான, யாக சாலை அமைக்க மண் எடுப்ப தற்காக, கோவிலுக்குள் மேற்குக் கோபுர வாசல் அருகே சித்தி ரைத் திங்கள் 2ம் நாள் பள்ளம் தோண்டப்பட்டது. இரண்டடி ஆழம் தோண்டிய நிலையில், சில சிலைகள் தட்டுப்பட்டன. இதையடுத்து, மிகக் கவனமாக தோண்டும் பணிகள் நடை பெற்றன. அப்போது அந்தப் பள்ளத்தில் இருந்து விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, உமைமுருகிறைவர் (சோமாஸ் கந்தர்), திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், சிவகாமி அம்மன் என ஊகிக்கப்படும் 23 உலோகச் சிலைகள். 16 பூசைக்குரிய பொருட்கள், 15 பீடங்கள், 50 வேறு சில உலோகப் பொருட்கள் மற்றும் 462 தேவாரச் செப்பேடுகள் என்பன, திருவருளின் திருவருட்கருணையால் வெளிப்பட்டன.

தேவாரப் பாடல்கள் செப்பேட்டில் எழுதப் பட்டதாக கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. ஆனால் இதுவரை காலமும் இவை எங்கும் கிடைக்கப் படவில்லை. சீர்காழி வெளிப்பாடே வரலாற்றில் முதல்முறை ஆகும்.

சிதம்பரம் கோயிலில் குலோத்துங்கச் சோழனிடமும் அவனது மகன் விக்கிரம சோழனிடமும்

(04ஆம் பக்கம் பார்க்க)

## திருமுறை ஈன்ற தெய்வத்தமிழ் மண் என்று போற்றி தருமை குருமகா சங்நிதானம் சீர்காழியில் வழிபாடு




திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சீர்காழி அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயில் வளாகத்துள் 16-04-2023 அன்று, சுவாமி ஐம்பொன் படிமங்களும் வரலாற்றில் முதன்முறையாக தேவாரச் செப்பேடுகளும் திருவருளாலும் குருவருளாலும் கிடைக்கப்பெற்ற புனித இடத்தை, தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் **"திருமுறை ஈன்ற தெய்வத்தமிழ் மண்"** என்று போற்றிப் பெயர் சூட்டி, 27-04-2023 அன்று வழிபாடு செய்தார்கள்.

திருமுறை கண்டெடுத்த குருமணிகள் திருக்கரங்களால் முதலில் படிஎடுத்து அருட்பார்வையிட்டபோது, செப்பேட்டில் வெளிப்பட்டருளிய திருப்பதிகம் இத்தலத்து **"திருவெங்குரு"** என்ற திருநாமம் அமைந்த **"காலை நன் மாமலர் கொண்டடி பரவிக் கைதொழு"** எனத் தொடங்கும் பதிகமாகும். சீர்காழிப் பதியில் தோன்றிய திருஞானசம்பந்தர் சுவாமிகள், குறிஞ்சி பண்ணில் அருளிய முதலாம் திருமுறைப் பதிகம் இதுவாகும்.



# அருள்மிகு கௌரி அம்மை உடனுறை திருக்கேதீச்சரநாதருக்கு வைகாசித் திங்கள் 10ம் நாள் (மே 24) கொடியேற்றப் பெருவிழா

வரலாற்றுப் பெருமை மிக்க, தேவாரப் பாடல் கிடைக்கப்பெற்ற, மிகவும் பழமை யான, படவேரிடை மடவாளொடு பாலாவி யின் கரைமேலே திடமாக உறைகின்ற திருக்கேதீச்சரநாதனின் ஆண்டுப் பெருந் திருவிழா இம்முறை வைகாசித் திங்கள் வளர்பிறை 10ம் நாள் (மே 24) ஆரம்ப மாகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், இம்முறை மிகவும் சிறப்பாக, புத்தெழில் பொங்க நடைபெறவுள்ளது. வைகாசித் திங்கள் வளர்பிறை 18ம் நாள் (யூன் 1) வியாழக்கிழமை ஐந்து திருத்தேர் வீதியுலா நிகழ்வும் நடைபெறவுள்ளது. அடியவர்கள் அனைவரும் பெருமளவில் வந்து, பலாவியில் நீராடி பாவங்களைக் கழுவி பெருந் திருவிழாக் கண்டு மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டிக்கொள்கிறோம்.

திருக்கேதீச்சரத்தில் பெருமளவான திருவிழா பங்களிப்பாளர்கள், சிவபூமி இலங்கையின் சைவ பாடசாலைகளே ஆகும். மாணவர்களை சிவவழிபாட்டில் ஈடுபடுத்த எங்கள் முன்னோர்கள் வகுத்த வழிமுறைகளின் வெளிப்பாடே இது வாகும்.

# வவுனியா வெட்டுக்குநாறிமலை ஆதிலிங்கேச்சரர் திருநிலைப்படுத்தல்

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் திருக்கோயில் இலங்கையில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிவன் கோயில் ஆகும். இக்கோயில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒலுமடு-பாலமோட்டை கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலையின் உச்சியில் அமைந்துள்ளது. கிமு 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தப் பழமையான இந்த மலையின் வரலாறானது பல வரலாற்று சிறப்புகளைக் கொண்டு காணப்படுகின்றது. 300 மீட்டர் உயரமான வெடுக்குநாறிமலை அடிவராத்தில் கேணி, தமிழ் பிராமிய கல்வெட்டுக்கள் என்பன அதன் வரலாற்றைக் கூறுகின்றது. இம்மலையின் உச்சியில் ஆதிலிங்கேசுவரர் என்ற சிவனுடைய இலிங்கம் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஐந்து தலைமுறையினருக்கு மேலாக இப்பிரதேச மக்கள் இத்திருக்கோயிலை வழிபட்டு வருகின்றனர்.

2018 ஆம் ஆண்டில் இலங்கை தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினர் இம்மலைக்கு மக்கள் சென்று வழிபாடுகளை மேற்கொள்ளத் தடைவிதித்தனர். ஆனாலும், உள்ளூர் மக்களின் எதிர்ப்பினை அடுத்து, இத்தடையினை தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் நெடுங்கேணி காவல்துறையினர் தற்காலிகமாக நீக்கி வழிபாடுகளை மட்டும் மேற்கொள்ள அனுமதித்தனர். ஆனாலும் கோவிலைப் புனரமைக்கவோ அல்லது புதிய கட்டடங்களை அமைக்கவோ அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இவ்வாறான காலப் பகுதியில், சில நாட்களுக்கு முன்பு வெட்டுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் திருக்கோயில் இறைதிருமடிமங்கள், பூசைப்பொருட்கள், கோயில் கூடாரங்கள் என்பன மதவந்திகள் ஆகிய விசமிகளால் சேதப்படுத்தப்பட்டு, தூக்கி எறியப்பட்டிருந்தது. இந்நிகழ்வானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

சைவம் வளர்த்த சிவபூமியில் ஏற்பட்டிருந்த வஞ்சனையை எதிர்த்து பல சமய ஆர்வலர்கள் போராட்டங்களையும் உணவு தவிர்ப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தார். இதையடுத்து (27-04-2023) கடந்த வியாழக்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்றத்திலே குறித்த வெடுக்குநாறிமலை திருக்கோயில் அழிப்பிற்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கின் ஒருபகுதி தீர்ப்பாக குறித்த பகுதியில் வழிபாடாற்ற சைவசமயிகளுக்கு நீதிமன்று அனுமதி வழங்கியதோடு, மலையிலிருந்து நீக்கப்பட்ட திருவுருவங்களையும், வழிபாட்டுப் பொருட்களையும் மீண்டும் கோயிலாரிடமே கையளிக்க உத்தரவும் இட்டது. இந்த உத்தரவை அடுத்து வெடுக்குநாறியிலே (28-04-2023) கடந்த வெள்ளிக்கிழமை நான்னாளிலே அடியார்கள் ஆன்றோர்கள் எனப்பலரும் கூடி, ஆதிலிங்கப் பெருமானுக்கான இறைத்திருப்படிமங்களை மீள்புதுப்பித்து, நடந்து செல்லவே கடினமான அம்மலைப் பகுதியில் கருங்கல் படிமங்களை உச்சிக்கு



கொண்டு சென்று, திருநிலைப்படுத்தி வழிபாடாற்றியிருந்தனர். இந்நிகழ்வினை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளும், தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு. அகத்தியர் அடிகளாரும் திருக்கோயில் நிர்வாகத்தினருடன் இணைந்து, முன்னின்று நடத்தியிருந்தனர்.

**“என்னை நன்றாக இறைவன் படைதனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.”**

**திருச்சிற்றம்பலம்**

# கொழும்பில் “சுத்த சைவம்” நூல் வெளியீடும் அறிமுக விழாவும்

தமிழ்நாடு புனிதர் பேரவை சைவக்கோமான் சிவத்திரு. செ. முகவேல் பெருமான் எழுதிய “சுத்த சைவம் “ நூல் அறிமுக விழாவானது கொழும்பில் இடம்பெற்றிருந்தது. இவ்விழாவை இலங்கை சைவநெறிக்கழகம் முன்னெடுத்து நடத்தியிருந்தனர். இவ்நூல் அறிமுக விழாவானது கடந்த பங்குனித் திங்கள் 26ம் நாள் (09-04-2023) ஞாயிற்றுக்கிழமை, கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் உயர்திரு.சி. துரைராஜா பெருமகனார் முதன்மை விருந்தினராகவும் இந்நூலாசிரியர்பால் அன்புடைய சிவாச்சாரியர் சிவத்திரு.கி.ஜனேந்திரக் குருக்கள் திருவருள் விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர். மேலும் இவ்விழாவில் சைவப்பெரியோர் பலரும் கூடியிருந்தமை திருவருட்பேறேயாகும். இவ்விழாவின் சிறப்பம்சமாக, சித்தாந்தரத்தினம் பெருமகனார் சைவத்திரு சிவபாலகணேசனார் சுத்தசைவம் நூலினைப் படித்துவிட்டு, நூலாசிரியரினை யானையில் ஏற்றிச் சைவசமயத்தார் கொண்டாடவேண்டும் என்று ஆனந்தக் கண்ணீர் மல்க வேண்டியதற்கு அமைவாக, நூலினையே நூலாசிரியராக கொண்டு, சுத்த சைவம் நூலினை யானை மேல் ஊர்வலமாக எடுத்து வந்திருந்தனர்.

சுத்தசைவம் நூலில் உள்ள விடயங்களின் அடிப்படைக்கருத்துகள் மாணவர்களுக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பது இவ் விழாவினை ஏற்பாடு செய்த கழகத்தினரின் சிந்தனையாகும். எனவே, இவ்விழாவினை சைவசமயம் பேணுதும் கண்காட்சி அரங்காக நிகழ்த்த முடிவுசெய்து, சைவசமயம் - சுமார்த்தமதம் வேறுபாடுகளினை உணர்ந்து கொள்ளுமாறும், சுமார்த்த மத ஏகாதிபத்தியத்தினால் சைவசமயத்தில் ஏற்படுத்தப்படும் திரிபுகளினை அறிந்து கொள்ளுமாறும் கண்காட்சி அரங்கினை அமைத்திருந்தனர். மாணவர்களுக்கு சைவசமய உண்மைகளினை எளிதில் தெளிந்து கொள்ளுமாறு பரீட்சை வினாக்கள் அமைக்கப்படவேண்டும் என்று கழகத்தார் விண்ணப்பித்ததற்கு அமைவாக, வினாக்கள் அமைக்கப்பட்டு சைவசமய விழிப்புணர்வினை மாணவர்களிடம் ஏற்படுத்துமாறு பரீட்சைக்களமும் இடம்பெற்றது. பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அனுசரணையாகத் தந்துதவிய நூல்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசில்களில் பொதிசெய்து வழங்கப்பட்டது.

மேலும் இவ் அற்புத நூலானது கொழும்பு மற்றும் யாழ்ப்பாண புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு வெளிநாடுகளில் பெற்றுக்கொக்கக்கூடிய வசதிகளும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒசுத்திரேலியாவிலும் விரைவில் இந்நூல் வெளியிடப்பட இருப்பதும் சிறப்பம்சமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு



**“வண்ணையெல்லையினி றுத்தும் மாதங்க புரிதையல்**
**பாகமிசை மீதமரும் வைத்தீச மாலிங்கமே”**


233 ஆண்டுகள் தாண்டி, பல போர்களையும் கண்டு யாழ் மாநகர மத்தியில் இன்றும் தலைநிமிர் கோபுரத்துடன் காட்சி தரும் அருள்மிகு கோயிலே, யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில். இத்திருக்கோயில் வைத்திலிங்கச் செட்டியார் என்பவரின் உயரிய சிந்தனையால், திருக்கைலாய பரம்பரைத் திருப்பனந்தாள் மடத்தத் தம்பிரான் கூழாங்கைத்தம்பிரான் அவர்களின் அருளாசியோடு கட்டப்பட்டதாகும்.

அதனடிப்படையில் கூழங்கைத்தம்பிரான் சுவாமிகள் மேற்பார்வையில் ஆகமம் வல்லார் அமைத்த திருக்கோயிலின் ஆதிமூலம் என்னும் கருவறையும் அதனையடுத்த ஏனைய மண்டப வரிசைகளும் விமானமும் மூன்று வீதிகளும் என மிக அருமையாக அமையப்பெற்று, 1791ம் ஆண்டு சித்திரைத் திங்களிலே முதலாவது குடமுழுக்கும் இடம்பெற்றது. மேலும் ஆறுமுகநாவலர், விபுலானந்தர், யோகர் சுவாமிகள் என பல சைவப்பெரும் ஆன்றோர்களுடன் தொடர்புடைய திருத்தலமாகவே இது அமைகின்றது.

திருமூலர் சிவபூமி என்றழைத்த புண்ணிய பூமியில் சைவமானது வீழ்ச்சி கண்ட காலங்களிலும், பெரும் இராச கோபுரத்துடன் தலைநிமிர்ந்து, சைவசமயம் செழிக்க ஒரு வழி அமைத்து தந்த பெரும் சான்று ஆகவே வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் அமைகின்றது. இத்திருக்கோயிலின் சிறப்பை மேலும் மெருகூட்டும் வகையில், திருக்கோயிலானது மீள் புனரமைப்பு செய்யப்பட்டு, மங்கல ஆண்டு சித்திரைத் திங்கள் 13ம் நாள் (26-04-2023) புதன்கிழமை அன்று பெருவேள்விகள் வளர்க்கப்பட்டு திருக்குட நன்னீராட்டானது சிறப்பாக நடந்தேறியுள்ளமை வைத்தீசுவரர் திருவருளேயாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# திருக்கோணேச்சரர் திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழா - 2023



திருமூலரால் சிவபூமி என்று போற்றப்பட்ட ஈழத்திருநாட்டில், ஐம்பெரும் ஈச்சரங்களில் கிழக்கை பறைசாற்றும் திருத்தலமே திருக்கோணேச்சரம் ஆகும். ஈழத்திருநாட்டில் தேவாரப்பாடல் பெற்றத்தலங்கள் இரண்டே உள்ளன. அவற்றுள் தேவாரமுதலிகளுள் திருஞானசம்பந்த மூர்த்திகளால் “கோணமாமலை அமர்ந்தாரே” சிறப்பித்து பாடப்பெற்ற அருள்மிகு திருத்தலம் திருக்கோணேச்சரமாகும். கிழக்கின் அடையாளமாக தொன்மை மிகுந்த திருத்தலமாக இக்கோயில் திகழ்கின்றது.

பெரும் சிவபத்தனான இராவணன் பூசித்து வந்த இத்திருக்கோயிலானது, ஈழத்திருநாட்டில் சைவமானது நிலைகொள்வதற்கு காரணமாக மலைமீது மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இத்தகைய திருக்கோணேச்சரர் திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவானது, கடந்த பங்குனித் திங்கள் 22ம் நாள் (04-05-2023) நிறைமதியுடன் ஆரம்பாகி, சித்திரைத் திங்கள் 08ம் நாள் (21-04-2023) வெள்ளிக் கிழமையன்று தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் என 19 நாட்கள் திருவிழா சிறப்பாக நடந்தேறியுள்ளது. இத்திருவிழாவில் பெருமளவான அடியார்கள் கோணமலையானை வணங்கி அருள் பெற்றிருந்தார்கள்.

**நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்**
**நிமலர் நீறணி திருமேனி**
**வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த**
**வடிவினர் கொடியணி விடையர்**
**கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்**
**அளப்பரும் கனமணி வரன்றிக்**
**குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்**
**கோணமாமலை அமர்ந்தாரே.**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்!

நாம் யாருடைய தனிப்பட்ட சமய நம்பிக்கைகளுக்கும். விருப்பங்களுக்கும் எதிரானவர்கள் அல்ல, அவரவர் ஞானத்தின் முதிர்ச்சிப் படிநிலைகளில் நின்றே, வழிபாடு இயற்றுவதும், ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவதும் அமையும் என்பதே நியதி. எனினும் தற்போது முளைவிடும், சில அறிவீனமான செயல்களை ஆதரிப்பவர்களை எதிர்க்காது போனால், அடுத்துவரும் தலைமுறையினரது சிந்தனைகளிலும் இருள் சேர்ந்து விடும் என்ற அச்ச உணர்வின் காரணமாகவும், படிநிலைகளில் உயர்வான, சித்தாந்த சைவர்கள் தம் நிலையில் நின்று மீண்டும் கீழிறங்கி விடக்கூடாது எனும் பொது உணர்வாலுமே இப் பந்தியினை எழுதுகின்றோம்.

முத்தியின் பொருட்டே உயிர்கள் முயல வேண்டும். பசுக்களாகிய உயிர்களுக்கு. மல நீக்கம் கொடுத்து பிறவியில்லாப் பேரின்ப நிலையினை கொடுக்கும் பதியாகிய இறைவன் ஒரு பொருள் என்று உணர்ந்து, அப் பரசிவத்தை உணர்வதற்கு ஞான முதிர்ச்சியில்லாத் தன்மையாலும், சகலரும் வழிபாடு செய்து உய்ய வேண்டும் என்பதற்காகவும், மிக நீண்டகாலமாக சிவலிங்கத் திருமேனியில் வழிபாடு செய்தும், திருக்கோயில்களை அமைத்தும், அக் கோயில்களைக் காக்க தம் இன்னுயிரை ஈந்தும் எம் முன்னோர்கள் சித்தாந்த சைவ நெறியில் காலூன்றி நின்றனர். சுத்த சைவ நெறி தென்னகம் முழுவதும் பரவி, உலகின் பல்வேறு பகுதிகளில் பிராந்திய நெறியாகவும் கைக்கொள்ளப் பெற்றது. இந் நெறிக்கு மேல், ஒரு மார்க்கம் இல்லை, ஒரு தத்துவம் இல்லை என்பதைக் நூல்களைக் கற்றுணர்ந்தோரும் ஞானிகளும் தெரிந்து சைவத்தினை ஒழுகி உய்வு பெற்றனர்.

பரந்த வழிபாட்டு சுதந்திரம், அன்பு மார்க்கமுமாக, கட்டுப்பாடுகள் அற்ற தன்மையும் சைவத்தில் இருப்பதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, மக்களின் நம்பிக்கைகளை முதலீடாக்கி தம் வயிறு வளர்ப்பதற்கென்று, எந்தப் பக்குவமும் இல்லாமல், எந்த விதிமுறைகளுக்கும் சில பாபாக்களை "பரமாக்கள்" ஆக்கி, குடமுழுக்கும் செய்வித்து, நம் தெய்வக் கோயில்களில் தனியாக இருப்பிடம் அமைத்துக் குந்தவைத்தும் உள்ளது கண்டனத்துக்கு உரியது. அதற்கு உடன் போகும், 'சிவாச்சாரியார்கள்' எனும் பெயரில் தம்மை மறைத்துள்ள 'தரகாச்சாரியார்களை' என்னவெனச் சொல்லிப் புகழ்வது என்பதை நாம் அறியோம்! எம் வரும்காலத் தலைமுறைக்கு உண்மை அறிவை புகட்டி மெய் வழிபாட்டை காட்டி, வீடுபேற்றின் பால் உந்த வேண்டிய ஆச்சாரியார்களே பிழைப்பின் நிமித்தம் பிறழ்வதும், சில சைவக் கோயில்களின் அறங்காவலர்களும், இறை ஆகம அறம் காக்கத் தவறுவதும் நம் தவக்குறைவே!

பாபாக்களை வழிபடுவோர் வீடுகளில் வைத்து வழிபாடு செய்யட்டும், 'நாம் யார்?' 'நம் தத்துவம் எது?' என்பதை அறியாமல் அவர்கள் செய்யும் வழிபாடும், பலனும் அவர்களைச் சார்ந்தது. பாடநூல் கற்றறிந்து மதிக்கத்தக்க பணியில் இருப்போரும் அங்கனம் உழல்வது அவரவர் தனி இச்சையே! அதனைப் பொதுமைப்படுத்த முயல்வதும், சந்திகளில் நின்று கூட்டுப்பாடலில் (பஜனை) ஈடுபடாலும், சிவலிங்கத் திருமேனியை, அறிவேதும் இன்றி பாபாவைக் குந்த வைத்து அவமதிப்பதும் தேர்கட்டி ஊர்வலம் செய்வதும், கோபுரம் அமைக்கவும் தம் கொழுப்பைப் கூட்டவும் நிதி சேர்ப்பதும் இனி இந்த மண்ணில் நிகழக்கூடாது!

"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" என்று, சிறு தெய்வ வழிபாட்டினதும், தேவர்களை வணங்கும் முறையினாலும் முத்திப் பலன் கிட்டாது என அறுதியிட்டு அப்பர் பெருமான் சொல்லும் போது, மனிதராய் பிறந்து, வேடமிட்டு, அவர்கள் நன்மையே செய்தாரேனினும் அவர்களை குடமுழுக்குச் செய்து கோயில் கட்டுவது எவ்வளவு அபத்தம் என்பதை நம்மவர்கள் என்று உணர்ந்து தெளிவாரோ?

குரு வழிபாடு தான் வேண்டுமெனில் இந்த மண்ணில் தோன்றிய யோகிகளை வழிபடுங்கள், நாயன்மார்கள் திருத்தாழ்களைப் போற்றுங்கள், திருமுறைகளைக் குறைவின்றி ஓதுங்கள். அந்த வழி ஆண்டவனைக் காட்டும்! அன்பைப் பெருக்கி இன்பம் கூட்டும்! அதைவிடுத்து தத்துவக் குறைவானோரையும், யார் என்று அறியாதோரையும், அவர் சொன்னார், இவர் புகழ்ந்தார் எனச் சுய அறிவின்றிப் பின் தொடர்வது ஆறாம் அறிவுக்கு இழுக்கு என்றுணர்வோம்!

**"உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே!"**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# பார்வதி பரமேச்சுவரனுக்கே வெளிச்சம்!

மன்னு திருக்கோணமலையிலும், மதிபுனை மாதோட்டத்திலும் இன்னும் பல தலங்களிலும் வீற்றிருந்து இறைவன் உறைகின்ற ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம், அண்மைக்காலமாக பல சர்ச்சை மிகு விடயங்களை எதிர்கொண்டது யாவரும் அறிந்ததே! அதிலே வெடுக்குநாறி ஆதிசிவன் திருக்கோயில் அழித்தொழிக்கப்பட்டமை யானது மாபெரும் புள்ளியாகும்.

வவுனியாவின் நெடுங்கேணிப் பிரதேசத்திற்குட்பட்ட வழிபாட்டிடமே வெடுக்குநாறி ஆதிசிவன் திருக்கோயிலாகும். தமிழ்நாட்டிலே ஆகமஞ்சாரமுறையில் இறைவனை வழிபடுவது ஆன்மார்ந்த பூசையில் மட்டுமே. ஆயினும் ஈழத்தில் பரார்த்த பூசையெனும் உலகுய்ய ஆற்றிடும் பூசையிலும் ஆகமஞ்சாராமல் வழிபாடு இயற்றும் நாட்டார் வழிபாட்டியல் நிகழ்ந்தே வருகிறது. மேற்கூறிய விடயம் சிவ வழிபாட்டினைப் பற்றியது மாத்திரமே என்பதையும் இவ்விடத்தே குறிக்க விரும்புகின்றேன். அப்படிப்பட்ட நாட்டார் வழக்காறு சார் உலகுய் பூசை வேணி விளங்கும் செஞ்சடைப் பெருமானுக்கு இயற்றப்பட்ட இடங்களில் ஒன்று தான் வவுனியாவின் வெடுக்குநாறி மலையாகும்.

பெருமளவான சிவனடியார்கள் குருந்தூர் மலையையும், வெடுக்குநாறி மலையையும் ஒன்றாக நினைத்துக் குழப்பிக்கொண்டும், குழம்பிக் கொண்டும் உள்ளனர். இரண்டும் வெவ்வேறுபட்ட இடங்கள் என்பதையும், இவ்விரு வழிபாட்டிடங்கள் மீதும் பௌத்த ஆக்கிரமிப்பு அல்லது வன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் அடியவர் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த இரண்டு இடங்கள் மாத்திரமல்ல, கீரிமலை ஆதிசிவன் கோயில், கன்னியா வெந்நீரூற்று, நயினாதீவு, தையிட்டி உட்பட பல இடங்களும் இதையொத்த பிரச்சினைகளை அண்மையில் எதிர்கொண்டுள்ளன. இவ்வாறான பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பினை எதிர்த்து (25.04.2023) கடந்த செவ்வாய்கிழமை ஈழத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி பணி மற்றும் இயல்பு புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. இந்தப் போராட்டத்தின் இயல்பாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில முக்கிய நகரங்கள் முடங்கியதோடு உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட பேருந்து போக்குவரத்தும் தடைப்பட்டன

இதையடுத்து (27.04.2023) கடந்த வியாழக்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்றத்திலே குறித்த வெடுக்குநாறிமலை திருக்கோயில் அழிப்பிற்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கின் ஒருபகுதி தீர்ப்பாக குறித்த பகுதியில் வழிபாடாற்ற சைவசமயிகளுக்கு நீதிமன்று அனுமதி வழங்கியதோடு, மலையிலிருந்து நீக்கப்பட்ட திருவுருவங்களையும், வழிபாட்டுப் பொருட்களையும் மீண்டும் கோயிலாரிடமே கையளிக்க உத்தரவும் இட்டது. இந்த உத்தரவை அடுத்து ஆதிலிங்கப் பெருமான் வெடுக்குநாறியிலே (28.042023) கடந்த வெள்ளிக்கிழமை எழுந்தருளினார். ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டமும், நீதிமன்றத் தீர்ப்பும் ஈழத்து தமிழ்ச் சூழலில் மிக முக்கியமானவையாகும்.

ஆயினும் இவற்றின் விளைவு பலமானதாக இருக்குமா என்பதும் கேள்விக்குறியான விடயமே. ஏற்கனவே குருந்துர் மலை விடயத்தில் விகாரை அமைக்கத் தடைவித்த நீதிமன்ற உத்தரவையும் மீறி விகாரை அமைத்த அமைப்பிற்கு வெடுக்குநாறித் தீர்ப்பை தூக்கி எறிய எத்தனை நிமிடம் எடுக்குமென்பது அந்த பார்வதி பரமேச்சுவரனுக்குத் தான் வெளிச்சம். பௌத்த ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டமும் வெறும் அரசியல் விளையாட்டாக அமைந்து விட்டதோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. இவற்றை மாற்றவேண்டுமெனில் மடபுத்தியுள்ள தமிழர் சமூகம் முதலில் மாற வேண்டும். ஆக்கிரமிப்பும் அந்நியப்படுத்தலும் எமக்கொன்றும் புதிதல்ல, திருநாவுக்கரசர் காலத்தில் இருந்து இதை எதிர்கொண்டுதான் உள்ளோம். முதலிலே எம்மை நம்புவோம், இறைவனை நம்புவோம். அதுவே ஆற்றலின் முதற்படி!

**"ஆனைமாலை ஆதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே"**

**திருச்சிற்றம்பலம்**



## தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் திருவுளப்பாங்கின் வண்ணம்

சீர்காழித் திருக்குட நன்னீராட்டினை முன்னிட்டு
ஒருருவாயினைப் பதிகத்தினை ஒருகோடி முறை ஓதுவோம்

திருஎழுகூற்றிருக்கை

பண்: வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஓர்உரு ஆயினை மான்ஆங் காரத்து
ஈர் இயல்பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை
ஓர் ஆல் நீழல், ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒரு தாள் ஈர் அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி, ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்ச
கொன்று தலத்து உற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து, முப்பொழுது குறை முடித்து
நான்மறை ஓதி, ஐவகை வேள்வி
அமைத்து, ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி
வரன்முறை பயின்று, எழுவான் தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூ உலகும் புதைய, மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன், நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்து அமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும், தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்
மறு இலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

# பவானியில் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு திருநணாவுடையார் அருட்காட்சி அளிக்கும் பெருவிழா

### 63 நாயன்மார்கள் 96 திருமேனிகள் 55 பல்லக்குகள் என எங்குபார்த்தாலும் அருட்காட்சிகள்

திருநணா (பவானி) அருள்மிகு பண்ணார்மொழி அம்மை உடனமர் திருநணாவுடையார் திருக்கோயில் சித்திரைத் திருவிழா ஐந்தாம் நாளாகிய 30-04-2023 அன்று, பண்ணார்மொழி அம்மை, திருநணாவுடையார் உடன் கூடிய ஐம்பெரும் மூர்த்திகள், அறுபத்துமூன்று நாயன்மார்கள், திருமுறை ஆசிரியர்கள், தெய்வச்சேக்கிழார், சந்தான குரவர்கள் உள்ளிட்ட 96 திருமேனிகள் திருவீதி உலாவாக வலம்வந்தனர்.

இது வருடம் தோறும் சுவாமி நாயன்மார்களுக்கு அருட்காட்சி அளிக்கும் விழாவாக பவானி சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளையினரால் கொண்டாடப்படுகிறது. இம்முறை இந்தவிழாவில் மதுரை ஆதீனம் 293வது குருமகா சந்நிதானம் ஹரிஹர தேசிக பராமச்சாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீன 25வது குருமகா சந்நிதானம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் மற்றும் கோவை சிரவை ஆதீன கௌமார மடாலயம் 4வது குருமகா சந்நிதானம் இராமானந்த குமரகுருபர சுவாமிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







## திருமுறை ஓதியதன் பயனாக சீர்காழியில் அற்புதம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதியாக இருந்த நரலோக வீரன் என்பவன், செப்பேடுகளில் தேவாரப் பாடல்களை எழுதியதாக சிதம்பரம் கோயில் கல்வெட்டு கள் தெரிவிக்கின்றன. ஆகவே தற்போது கிடைத்துள்ள செப்பேடுகள் நரலோக வீரனால் எழுதப்பட்டதாக இருக்கலாம் என்கிறார் ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியன் ஐயா. தமிழ்நாட்டின் மீது பல முறை அந்நியர் படையெடுப்புகள் நடந்திருக்கிறன. மாலிக் கபூர் படையெடுப்பு, பிரெஞ்சு படையெடுப்பு, ஆங்கிலேயர் படையெடுப்பு என தொடர்ந்து நடந்திருக்கிறது. இப்போது கிடைத்திருப்பவை முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தைச் சேர்ந்தது என்று ஊகிப்பதால், இது மாலிக் கபூர் படையெடுப்பிலிருந்து இந்தப் பொருட்களைக் காக்க புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்கிறார் பாலசுப்பிரமணியம் ஐயா.

திருச்சிற்றம்பலம்

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**ஆணவம் என்பதன் பொருள் என்ன?**

ஆணவம் என்ற சொல் அணுத்தன்மை ஆக்குவது (சிறிதாக்குவது) என்ற பொருளில் அமைந்தது. உயிரின் ஆற்றல்களை விளங்க விடாமல் கட்டுப்படுத்தி, அதனைச் சிறுமைப்படுத்துவது ஆணவம்.

**ஆணவம் உயிருடன் எப்பொழுது சேர்ந்தது?**

ஆணவம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் உயிருடன் சேரவில்லை. இறைவனைப் போல் ஆணவத்துக்கும் தோற்றமும் முடிவும் இல்லை. செம்பில் களிம்பு போலவும் நெல்லில் உமி போலவும் ஆணவம் இயற்கையாகவே உயிருடன் சேர்கிறது. இதனால் ஆணவத்தைச் 'சகச மலம்' என்று குறிப்பிடுவதுண்டு. சகசம் - இயற்கையானது, மலம் - அழுக்கு, ஆணவம் உயிருடன் அனாதியே சேர்ந்திருப்பது.

**ஆணவம் உயிரைச் சிறுமைப்படுத்துவது எப்படி?**

உயிருக்குச் சில ஆற்றல்களுள்ளன. எதனையும் அறிகின்ற ஆற்றல் உண்டு. இந்த ஆற்றல் ஞான சக்தி எனப்படும். இது போல் எதனையும் செய்யவும் விரும்பவும் வேண்டிய ஆற்றல்கள் உண்டு. இவை முறையே கிரியா சத்தி, இச்சா சத்தி எனப்படும். ஆணவம் இருள் போல் இருந்து உயிரின் அறிவு, இச்சை, செயல் (ஞானம், இச்சை, கிரியை) ஆகியவற்றை விளங்கவிடாமல் மறைக்கிறது. இங்ஙனம் உயிருக்கு ஒரு தடைபோல் நின்று ஊறு விளைத்து, உயிரைத் தவறான வழியில் செலுத்திச் சிறுமைப்படுத்துகிறது.

**ஆணவம் என்பது தற்செருக்கு அல்லது கர்வம் (Ego) என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இது சரியான கருத்தா?**

ஆணவம் என்பது தற்செருக்கு அல்ல. தற்செருக்கு, அறியாமை போன்றவற்றுக்கு மூலமாக இருப்பது ஆணவம். உயிரின் துன்பங்கள் இடர்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது இது.

**ஆணவம் ஒன்றுதான் உயிரியின் குறைகளுக்கு அடிப்படைக் காரணமா? கன்மமும் மாயையும் உயிருக்கு ஊறு செய்வதில்லையா?**

எமது செயல்கள், விருப்பங்கள் ஆகியவை எமது அறிவுக்கமைய வெளிவருவன. எமது அறிவுக்குத் தடையாக இருந்து அறியாமையை உண்டு பண்ணுவது ஆணவம். ஆகவே ஆணவமே எமது அடிப்படைக்குறையாக உள்ளது. ஆணவத்தின் வெளிப்பாடான அகந்தை, மமதை முதலியவற்றால் எதனையும் நடுநிலையில் நின்று பார்க்கும் தன்மையை நாம் கொள்வதில்லை. இதனால் தவறான வழிகளில் ஈடுபடுகிறோம். இந்த நிலையை உருவாக்கும் தற்செருக்கு, அறியாமை போன்றவற்றிற்கு மூலகாரணமாக இருப்பது ஆணவம் என்பதால் அது மூல மலம் என்றும் கூறப்படுகிறது.

உயிரைப் பிணித்த ஆணவமல நீக்கத்துக்காக இறைவனால் அளிக்கப்பட்டவை கன்மமும் மாயையும், இவையும் ஆணவமலத்தின் பிடி விலகும் வரை உயிருக்குக் கட்டாக அமைந்து தம்மளவில் ஊறு செய்வன. (இது குறித்த விளக்கம் பின்னுள்ள பாடங்களில் தரப்பட்டுள்ளன).

**ஆன்மாவுக்கு ஊறு செய்வதில் ஆணவ மலத்தின் இயல்பு எவ்வாறு அமைந்துள்ளது?**

தன் நிலையில் அது உயிரின் அறிவை மறைத்து ஊறு செய்கிறது. இங்ஙனம் மறைக்கும் அதன் ஆற்றல் 'ஆவாரக சத்தி' எனப்படும். (ஆவரகம் - மறைத்தல்). இது அதன் சிறப்பியல்பு. இது ஆணவ மலத்தின் தன்னியல்பு அல்லது சொரூபலக்கினம் எனப்படும்.

இன்னொரு வகையிலும் ஆணவம் செயற்படுகிறது கன்மம், மாயையுடன் கூடி உயிரைத் தவறாக அறியச் செய்கிறது. கன்மமும் மாயையும் உயிரைத் தவறாக அறியச் செய்கிறது. கன்மமும் மாயையும் உயிரின் அறிவாற்றலை திருத்தமுறச் செய்கின்றன. இருளிலே எதனையும் காணமுடியாத நிலையில் நாம் இருக்கும் பொழுது ஒரு கைவிளக்கு ஓரளவு இருளை விலக்கி பொருட்களை காணத் துணை புரிகின்றது. ஆனால் அதன் மங்கிய ஒளியில் பொருட்களைச் சரியாகப் பார்க்காமல் தவறாக காணும் நிலை உண்டாகிறது.

இது போன்று, ஆணவ இருளில் இருக்கும் உயிருக்கு, கன்மமும் மாயையும், ஆணவ இருளை ஓரளவு நீக்கினாலும், தவறாக அறியும் நிலைமையும் ஏற்படுத்துகின்றன. இந்த நிலை உண்மையில் ஆணவத்தின் சேர்க்கையால் உண்டானதே. இதனைச் செய்யும் ஆணவத்தின் ஆற்றல் 'அதோ நியாமிகா சத்தி" எனப்படும். "அதோ நியாமிகை" என்றால் "கீழ்ப்படுத்தி வைத்தல்" என்பது பொருள். இது ஆணவத்தின் பொது இயல்பு. ஆணவத்தின் தடத்தலக்கினம் என்று இது அழைக்கப்படும்.

**ஆணவத்தின் செயற்பாடுகள் எத்தனை அவற்றை விளக்கவும்?**

மேற்கூறப்பட்ட இரு நிலைகளில் நின்று உயிருக்கு இடர் செய்யும் ஆணவத்தின் செயற்பாடுகள் (காரியங்கள்) ஏழாக வகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1. மோகம் - எமக்குள்ள அறிவின் துணையால் தீமை விளைவிப்பவற்றை தெளிவாக அறிகிறோம். ஆயினும் அவற்றைத் தவிர்க்காமல், அவற்றில் ஈடுபடுவதிலே விருப்பம் கொள்கிறோம். இது மோகம் எனப்படும்.

2. மதம் - தன்னைப் பற்றி உயர்வாகவும் தன் கொள்கைகளைச் சிறந்ததாகவும் எண்ணித் தற்பெருமை கொள்ளல் மதம் எனப்படும்.

3. அராகம் - ஒரு பொருள் கிடைக்காதென்று தெரிந்தும் அதனை அடைய ஆசைப்படுதல் அராகம் எனப்படும்.

4. கவலை - கிடைக்க வேண்டியது கிடைக்குமா கிடைக்காதா என்றும், செய்வதற்கேற்ற பலன் வருமா வராதா என்றும், உரிமையானவை என்றும் இருக்குமா நீங்குமா என்றும் எண்ணி மனம் வருந்துவது கவலை எனப்படும்.

5. தாபம் - வேண்டியவர் பிரிந்தபோதும் பிரிய நேரிடும் என்பதை எண்ணிய போதும் உண்டாகும் பிரிவாற்றாமை தாபம் எனப்படும்.

6. வாட்டம் - தாபத்தினால் உண்டாகும் வருத்தம் வாட்டம் எனப்படும்.

7. விசித்திரம் - எமது இன்பதுன்பத்துக்கு நாமே காரணமாக இருக்கிறோம். ஆயினும் அவற்றுக்குப் பிறரைக் குறை கூறுவது எமது இயல்பாக இருக்கிறது. இது விசித்திரம் எனப்படும். ஆணவத்தின் செயற்பாடுகளான இந்த ஏழும் வெவ்வேறு வகையில் உயிர்களைக் கட்டுப்படுத்துகின்றன.

**உயிர்கள் பல எனவும் உயிர்களின் ஆற்றல்கள் வெளிப்பட முடியாதவாறு ஆணவம் மறைக்கிறது எனவும் கூறப்படுகிறது. அவ்வாறாயின் ஆணவமும் பலவாக உள்ளதா?**

ஆணவத்தை இருளுக்கு ஒப்பிடுவதுண்டு. இருள் பல பொருட்களை மறைத்தாலும் அது ஒன்றுதான். அவ்வாறே ஆணவமும் பல உயிர்களின் ஆற்றலை மறைத்தாலும் அது ஒன்றே: பலவல்ல. உண்மையில் இருளைவிடக் கொடியது ஆணவம். இருள் பொருளை மறைத்தாலும் தன்னைக் காட்டுகிறது. இருளின் இருப்புத் தெரிகிறது. ஆனால் ஆணவம் உயிரின் ஆற்றலை மறைப்பதோடு தன்னையும் காட்டாது மறைக்கிறது.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமையப்பெற்ற தாயுமானவர் சுவாமி திருக்கோயில் கடவுள்மங்கல நன்னீராட்டு



கடவுள்மங்கல நன்னீராட்டு
பங்குனித் திங்கள் 22ம் நாள், 2023
உத்தரம் விண்மீன்

கோயில் உருவாக்க நிதி அன்பளிப்பு
சிவத்திரு. முருகண்டி நவநேசன்

# தென்னாட்டின் ஏற்பாட்டில் நடைபெற்ற சூரியனார் கோயில் ஆதீன சிவக்கர தேசிக சுவாமிகளின் மலையகம் மற்றும் கொழும்பு நிகழ்வுகள்



பண்டாரவளை அருள்மிகு சிவசுப்பிரமணியம் திருக்கோயில்



காலி எல அருள்மிகு வீரகத்தி விநாயகர் திருக்கோயில்



கெட்டியாந்தோட்டை அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில்






ஜிந்துப்பிட்டி அருள்மிகு சிவசுப்பிரமணியம் திருக்கோயில் - ஜெயந்திநகர்.



கொட்டஞ்சேனை அருள்மிகு வரதராச விநாயகர் திருக்கோயில்



இரத்தினபுரம் அருள்மிகு இரத்தினேசுவரம் திருக்கோயில்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**1. பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?**

அ) சேர்.பொன்.இராமநாதன் பெருமகனார் கல்லால் கட்டிய சிவாலயம் பொன்னம்பலவாணேச்சரமாகும்.
ஆ) கேது வழிபட்ட திருத்தலம் திருக்கேதீச்சரமாகும்.
இ) இராமன் வழிபட்ட திருத்தலம் இராமேச்சரமாகும்.
ஈ) திருவண்ணாமலைத் திருத்தலம் திருகோணமலையில் விளங்கும் சிவத்தலமாகும்.

**2. பின்வருவனவற்றில் தவறான கூற்று எது?**

அ) சிவபெருமான் ஐந்தொழில்களினையும் தாமே நேரடியாகச் செய்வார்.
ஆ) சிவபெருமான் காத்தல் தொழிலினை திருமாலினை அதிட்டித்தும் செய்வார்.
இ) சிவபெருமான் சதாசிவனாக விளங்கி அருளல் தொழிலினைச் செய்வார்.
ஈ) சிவபெருமான் மறைத்தல் தொழிலினை பிரம்மாவினை அதிட்டித்துச் செய்வார்.

**3. "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்த பிரான்" இங்கு பாலுக்காக அழுத பாலகன்**

அ) திருஞான சம்பந்தர்
ஆ) உபமன்யு முனிவர்
இ) முருகன்
ஈ) மெய்கண்டார்

**4. மார்க்கண்டேயர் புராணம் சொல்லும் நீதி என்ன?**

அ) நவக்கிரகங்களினை வழிபட்டு நன்மை அடையலாம்
ஆ) பாபாவினை வழிபட்டு நன்மை அடையலாம்
இ) சிவபெருமான் ஒருவரே விதியினை மாற்றி அருளக்கூடிய முழுமுதற் கடவுள் என்பதினால் அவர் ஒருவரால் மட்டுமே வினைகளினை ஒழித்து துன்பங்களினை நீக்கமுடியும்.
ஈ) ஆஞ்சநேயரினை வழிபட்டு நன்மை அடையலாம்

**5. சிவனடியாருக்கு உணவளிப்பதன் மகத்துவத்தை உலகுக்கு உணர்த்திய நாயனார்.**

அ) இளையான்குடி மாற நாயனார்
ஆ) கண்ணப்ப நாயனார்
இ) ஆனாய நாயனார்
ஈ) விறன்மிண்ட நாயனார்

**6. பின்வருவனவற்றில் சரியான இணைப்பு**

அ) உத்தூளனம் - திருநீற்றை நெற்றியில் பரவிப் பூசுவது
ஆ) சணிகலிங்கம் - நிரந்தரமாகப் பூசிக்கப்படும் சிவலிங்கம்
இ) ஆசாரிய அபிடேகம் - சமய தீட்சை பெற்றார் அடுத்ததாகப் பெறும் தீட்சை
ஈ) பஞ்சாங்க வணக்கம் - ஆண்களுக்குரிய வணக்க முறைமை.

**7. பின்வருவனவற்றில் சைவசமயக் கொள்கையினை சிறப்பாக விளக்கும் கூற்று யாது?**

அ) சிவபெருமான் உயிர்களுடனும் உலகங்களுடனும் ஒன்றாய்க் கலந்து உடனாய் விளங்கினாலும் பொருள் தன்மையில் சிவபெருமான் வேறாய் நிற்கும் பெருங்கடவுளாவார்.
ஆ) சிவபெருமானே மாயையினால் உயிர்களாய் உலகாய் திரிபடைந்து நிற்கின்றார்.
இ) ஒரு உயிர்தான் மாயையினால் பல உயிர்களாகப் பிறவிகள் எடுத்து வருகின்றது.
ஈ) வினையினை நாம் ஒருபோதும் வெல்ல முடியாது.

**8) நடராசப் பெருமான் வடிவம் குறித்த தவறான கூற்று யாது?**

அ) தூக்கிய திருவடி அருளல் தொழிலினைக் குறிக்கும்.
ஆ) அபயகரம் காத்தல் தொழிலினைக் குறிக்கும்.
இ) நடராசப்பெருமான் வடிவம் ஐந்தொழில்களினையும் உணர்த்தும் ஆனந்தத் திருநடன வடிவம் என்பதினால் இல்லத்தில் வைத்து வழிபடுதல் சைவர்களின் தலையாய கடமையாகும்.
ஈ) நடராசப் பெருமானின் வலதுகரத்தில் தீச்சுடர் இருக்கும்.

**9) சைவசமய ஆதினங்கள் - சரியான தொகுப்பினைத் தெரிவுசெய்க.**

அ) திருவாவடுதுறை ஆதீனம்,தருமபுர ஆதீனம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஆ) திருவாவடுதுறை ஆதீனம், இராமகிருஷ்ண மடம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்
இ) திருவாவடுதுறை ஆதீனம், சின்மியாமிஷன், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஈ) திருவாவடுதுறை ஆதீனம்,சின்மியாமிஷன்,இராமகிருஷ்ண மடம்

**10) பின்வரும் கூற்றில் சரியானது எது?**

அ) சைவசமயத்தவரின் புனித நூல்கள் பன்னிரு திருமுறையும் பதினான்கு மெய்கண்ட சாத்திரமுமாகும்.
ஆ) சைவசமயத்தவரின் புனித நூல் பகவத்கீதையாகும்.
இ) சைவசமயத்தவரின் புனிதநூல் திரிபீடகமாகும்.
ஈ) சைவசமயத்தவரின் புனிதநூல் தெய்வத்தின் குரலாகும்.

**11. அப்பர் அடிகள் நமச்சிவாயப் பதிகம் பாடியருளியது?**

அ) அடைத்த கோவில் கதவு திறக்கப் பாடியபோது
ஆ) நீற்றறையில் அடைத்த போது
இ) கல்லுடன் கட்டி கடலில் இட்டபோது
ஈ) பாம்பு தீண்டிய சிறுவனை உயிர்ப்பித்த போது.

**12. நவக்கிரகங்களால் சிவனடியாருக்கு எவ்வித துன்பமும் நேராது என்பதைப் பாடும் சம்பந்தரின் பதிகம்?**

அ) யாழ்மூரிப் பதிகம்
ஆ) மாலைமாற்றுப் பதிகம்
இ) கோளறு பதிகம்
ஈ) திருநீற்றுப் பதிகம்

**13. சைவ சமயத்தின் பிரிவு அல்லாதது?**

அ) இலிங்காயதம்
ஆ) காஷ்மீர சைவம்
இ) சுமார்த்தம்
ஈ) பாசுபதம்

**14. பின்வருவனவற்றில் தவறானது எது?**

அ) ஏழாம் திருமுறை - சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது
ஆ) எட்டாம் திருமுறை - மாணிக்கவாசகசுவாமிகள் அருளியது
இ) பதினொன்றாம் திருமுறையில் சிவபெருமான் அருளிய திருமுகப்பாசுரம் உண்டு.
ஈ) காரைக்கால் அம்மையார் அருளியது பத்தாவது திருமுறையில் அடக்கம்.

**15. பின்வருவனவற்றுள் தவறான கூற்று யாது?**

அ) சிவபெருமானே திருமால் வடிவம் தாங்கும்போது சிவசக்தி வடிவங்களில் ஒன்றாக, சிவபெருமானின் புருசசத்தியாகக் கூறப்படுவார்.
ஆ) புண்ணிய உயிர்கள் சிவபெருமானினால் காத்தல் தொழிலுக்கு நியமிக்கப்பட்டால் அணுபட்ச திருமால் என்று அழைக்கப்படுவர்.
இ) அவதாரங்கள் எடுக்கும் அணுபட்சத் திருமால் சிவனடியாராவார்.
ஈ) சேந்தனார் திருமாலினைப் போற்றிப் பாடினார்.

**16. வேறு சமயத்தவராக இருந்து சிவனை வழிபட்டு அருள்பெற்ற அடியார்**

அ) சாக்கிய நாயனார்
ஆ) ஆண்டாள்
இ) அபிராமிப் பட்டர்
ஈ) மங்கையர்க்கரசியார்

**17. பின்வருவோரில் யாரை வழிபடுவோர் சைவர்களாகக் கருதப்பெறுகிறார்கள்**

அ) சீரடி சாயி பாபா
ஆ) அம்மா பகவான்
இ) சமய குரவர்
ஈ) பிரம்மகுமாரிகள்

**18. சிவபெருமானின் எண்குணங்களுள் ஒன்று அல்லாதது.**

அ) முற்றறிவு உடையவர்.
ஆ) எல்லையில்லாத இன்பம் உடையவர்
இ) முடிவில்லாத ஆற்றல் உடையவர்
ஈ) ஆணவ மல சம்பந்தமான இராசச,தாமச,சாத்வீக குணங்கள் உடையவர்.

**19. பின்வருவனவற்றுள் தவறான வசனம்**

அ) துறவிகள், உலக நாட்டத்தினை விரும்பாதவர்கள் கோவிலை இடப்புறமாக சுற்றி வந்து வழிபடலாம்.
ஆ) சிவபெருமானை பொன்னிறம்,செந்நிறமாக சித்தரிப்பதே தமிழ் மரபு.
இ) "அன்பே சிவம்" என்ற வரி திருக்குறளில் இடம்பெற்றுள்ளது.
ஈ) சாதி, பால் வேறுபாடு இல்லாமல் அனைவரும் சைவ சமய தீட்சை பெறலாம்.

**20) "சனீஸ்வரன் என்பது தவறாகும்.சனைச்சரன் என்பதே சரியானதாகும். நளமகாராசன் முற்பிறவிகளில் செய்த தீய வினைகளினை ஊட்டுவதற்காக, சனைச்சரன் நளமகாராசனைப் பிடித்துத் துன்புறுத்தத் தொடங்கினான். இதனால் மனம் வாடிய நளமகாராசன், சிவபெருமானினைத் திருநள்ளாறு திருத்தலத்தில் வழிபட்டு சனைச்சரனின் தாக்கத்தில் இருந்து விடுபட்டுக்கொண்டான். "**
**மேல் தரப்பட்டுள்ள பந்தியில் இருந்து நீர் பெற்றுக்கொள்ளும் விளக்கத்திற்கு முரணாக இருப்பது யாது?**

அ) சிவபெருமானினை வழிபடுவதினாலேயே நவக்கிரகங்களின் தாக்கங்களில் இருந்து விடுபடமுடியும்.
ஆ) நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நாம் முன்செய்த வினைகளின் பயன்களேயாகும்.
இ) நவக்கிரகங்களினை வழிபட்டு நன்மை அடையலாம்.
ஈ) நாம் செய்த வினைகளினை ஊட்டுவதற்கு சிவபெருமானால் நியமிக்கப்பட்ட, சிவபெருமானின் ஏவலில் நிற்பவர்களே நவக்கிரகங்களாகும்.

பதில்கள்:
**1)ஈ, 2)ஈ, 3)ஆ, 4)இ, 5)அ, 6)அ, 7)அ, 8)ஈ, 9)அ, 10)அ, 11)இ, 12)இ, 13)இ, 14)ஈ, 15)ஈ, 16)அ, 17)இ, 18)ஈ, 19)இ, 20)இ**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்

**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**



### நாவுக்கரசர் மீது யானை ஏவி கொல்ல முயன்றமை

நஞ்சுண்ட அப்பர் பெருமான் உயிருற்றிருந்ததை அறிந்த தீஞ்சமணர்கள், **"கொடிய நஞ்சும் அமுதம் ஆயிற்றே!"** என்று சமணர் அச்சம் கொண்டவராகி, **"நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணச்செய்தும், நம் சமயத்தில் கொண்ட நஞ்சு நீக்கும் மந்திரத்தால், அதன்பயன் விளையாதவாறு தடுத்து விட்டான். அவன் இறக்கும் வகை இலதேல் எங்கள் உயிர்களும் உனது ஆட்சியும் அழியும்"** என பல்லவ மன்னனிடத்தே வஞ்சக உரை வழங்கினர்.

அவர்களின் சொல்லைக் கேட்ட அறிவுகெட்ட அரசனும், **"நம் நெறியை அழித்த அவனை இனி ஒறுக்கும் வகை யாது?"** என வினவ, அச்சமணர்களும் **"மந்திர சாதகங்களை நாங்கள் நீக்க, உன் வெற்றி பொருந்திய வலிய யானையை அவன் முன்னே விட்டு இடறச் செய்வதே தகுந்த வழியாகும்"** என்று உரைத்தனர். பெரும் பாவிகளுள்ளும் கீழானவர்களான அச்சமணர்கள் சொல் கேட்டு அவ்வரசன், வியக்கத்தக்க சினம் கொண்ட கொலைத் தொழிலைச் செய்யும் யானையை அவர் மீது விடுமாறு ஏவினான்.

மதயானையின் வடிவத்துடன் வருகின்ற ஓர் இயமனைப் போலக் கொடிதான அந்த யானை, நாவுக்கரசரை நோக்கி சினங்கொண்டு முன்னேறியிருந்தது. திருநாவுக்கரசர் சற்றும் அஞ்சாமல், ஆனேற்றின் மேல் விளங்கும் சிவ பெருமானின் பொன் போன்ற திருவடிகளை நினைந்த வண்ணம், வஞ்சனையுடைய சமணர்கள் விடுத்த, மதமும் சினமும் உடைய யானையை நோக்கிச், **"சிவந்த சடை பொருந்திய நீண்ட முடியையுடைய கூத்தரும், தேவர்க்கெல்லாம் தேவரும், வெண்மையான ஒளிபொருந்திய மூவிலைகளையுடைய சூலத்தை ஏந்தியவருமான திருவீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் அடியவர் யாம்! அதனால் அஞ்ச வருவது ஏதும் இல்லை."** என்று அரிய தமிழ்ப் பதிகமான,

**சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

எனும் பதிகத்தை இவ்வுலகவர் உய்யும்படி மிக்க மகிழ்வுடன் பாடியருளினார்.

மலையை பிளப்பது போல் சினம்கொண்டு முன்வந்த மதயானையும், அப்பர் பெருமானின் நாவிலிருந்து வெளிப்பட்ட குளிர்ந்த தமிழ் மாலை பதிகத்தால், உளம் குளிர்ந்து, அன்பு பொருந்திய கொள்கையுடைய திருத்தொண்டரை, அவர் முன்பு வலமாகச் சுற்றி வந்து, எதிரில் தாழ்ந்து, எல்லாத் திக்குகளில் உள்ள வரும் காணும்படி அவ்யானை நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்றது.

ஆளுடைய அரசரை வணங்கி, அவ்யானை அஞ்சி அங்கிருந்து பெயர்ந்து போக, அதனை அவர்மீது ஏவுதலை மேற்கொண்டிருந்த கொடிய பாகர்கள் வளைத்தும், அடர்த்தும், திரும்பவும் அதனை அவர்மீது போகுமாறு செய்து காட்டிட, அவ்வாறு செய்யாது, நெருங்கிய அவர்களையே கொன்று, சமணர்களையும் அழிக்க எதிர்ந்து வந்தது. ஓடிச், சமணர்களைப் பற்றி உழறி அழித்தும், மிதித்தும், பிளந்தும், தேடிச் சென்று பலரையும் கொன்றும், அந்நகர் கலக்கம் அடைந்து வருந்த, நீண்ட கடலைக் கலக்கும் கொடிய மந்தர மலையைப் போல அழிக்கும் தன்மை பூண்ட அவ்யானை, அந்த அரசனுக்குத் துன்பத்தை உண்டாக்கியது.

### நாவுக்கரசரை கல்லில் கட்டி கடலில் வீசியமை


யானையின் கையினின்றும் தப்பிய தீவினையாளரான சமண்சமய மக்கள் எல்லாரும், மானம் அழிந்து, மயங்கி, வருத்தம் அடைந்த மனம் உடையவராகி, மன்னனிடத்தே மேலும் மேலும் வஞ்சனையை சேர்த்தனர். உண்மை உணரா மன்னனும் வஞ்சனை மிகுதியால் அவர்களின் சொல்லைக்கேட்டு சினந்து, **"இனிச் செய்யக் கூடியது யாது?"** என வினவினான்.

தாங்கள் கருதிய வஞ்சனையையே முடிக்கும் செயலையுடைய அவ்வமணர்கள் **"கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கடலில் வீசி யெறிதல் இனிச் செய்யத்தக்கது"** எனக் கூறினர். அதனைக் கேட்ட மன்னன், அத்தகைய தொழிலைச் செய்யும் மக்களைப் பார்த்து, **"தீமைசெய்த தருமசேனனைத் தப்ப விடாது கொண்டு போய், பக்கத்தில் ஒரு கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டி, ஒரு படகில் ஏற்றி, மிகவும் ஒலிக்கின்ற கடலில் வீசி வீழ்த்தி விடுங்கள்"** என அனுப்பினான்.

இதனை சேக்கிழார் பெருமான் **"தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமம் உறக்கொடு போகிப் பாங்கொரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்தோர் படகில் வீங்கொலி வேலையில் எற்றி வீழ்த்துமின்"** என்று தம்புராணத்தில் காட்டிச் செல்கின்றார்.

அச்செயலைச் செய்யப்போகும் அவர்களோடு, கொடு வினை செய்யும் மற்ற அமணர்களும் செல்ல, நாவுக்கரசரும் செம்மையான தம் திருவுள்ளம் சிறப்படைய அவர்களுடன் சென்றார். அரசன் ஆணையிட்டவாறே அவ்விழிந்தோர் தம் செயலைச் செய்து முடித்தனர். அவர்கள் அத்தகைய செயலைச் செய்து நீங்கிய பின்பு, ஒப்பற்ற ஆழமுடைய கடலுள் வீழ்ந்த திருநாவுக்கரசரும், 'எந்நிலையிலும் நமச்சிவாயத்தை நான் மறவேன்' என்று ஐந்தெழுத்தைப் போற்றுபவராய்,

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே.**



எனும் தூய திருமொழிகளை முதலில் வைத்துத் தொடங்கிய நல்ல தமிழ் மாலையாக, **"நமசிவாய"** எனத் துன்பக் காலத்தில் உடனிருந்து காக்கும் திருவைந்தெழுத்தை, நிரம்பிய அன்புடன் விடாது பற்றிய நிலையில் திருப்பதிகத்தைப் பாடினார்.

அரிய திருவைந்தெழுத்தைத் திருநாவுக்கரசர் போற்ற, கரிய நெடிய கடலுள் அக்கல்லானது மிதக்கலாயிற்று. அப்பெரிய கல்லும், அங்குத் திருநாவுக்கரசர் அதன்மீது வீற்றிருக்கத் தெப்பமாக மிதக்க, அவரது திருமேனியைப் பிணித்திருந்த கயிறும் அறுபட்டது. அக்கல்லாகிய தெப்பத்தின் மேல் வீற்றிருந்த கெடுதல் இல்லாத சிறப்பினையுடைய மெய்ப் பெரும் தொண்டரான நாவரசரும் விளங்கித் தோன்றினார்.

திருவருள் பெற்ற வருணனே, நாவுக்கரசரைச் சேர்ந்து அடைந்த கருங்கல்லே சிவிகையாய் ஆகிடத், தன்கைகளால் ஏந்தியவாறே கொண்டுவந்து, அழகிய திருப்பாதிரிப்புலியூர் எனும் திருப்பதியின் அருகே, கரையேறச் செய்தான்.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரச நாயனார் புராணம் (108 - 131)

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு பெரியநாயகி உடனுறை வீரட்டானேசுவரர் (வீரட்டானம்) திருக்கோயில் - திருவதிகை வீரட்டானம் (திருஅதிகை)

## ( தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 218 ஆவது திருக்கோயில் - திருவதிகை வீரட்டானம் )

**கீதமுமை பாடக் கெடில வடபக்கம்**
**வேத முதல்வன் நின்றாடும் வீரட்டானத்தே.**

முப்புரம் எரித்த பெம்மான் மூவருக்கு அருள் செய்ததும், திருவைந்தெழுத்து மந்திரத்தால் இறைவன் மும்மலங்களை சிதைத்துக் காட்டியதுமாக, எண் வீரட்டானத் தலங்களுள் சிறப்புடைய தலமாக,அருள்மிகு பெரியநாயகி உடனுறை வீரட்டானேசுவரர் பெருமான் உறையும் பதியே திருவதிகை வீரட்டானம் திருக்கோயிலாகும்.

**அமைவிடம்:** கடலூர் மாவட்டம், தமிழ்நாடு
கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலிருந்து 2-கி. மீ. தொலைவில் உள்ளது. சென்னை, கடலூர், விருத்தாசலம், விழுப்புரம், சிதம்பரம் முதலிய இடங்களிலிருந்து பண்ருட்டிக்குப் பேருந்து வசதி உள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** வீரட்டானம், வீரட்டேசுவரர், வீரட்டநாதர், அதிகைநாதர்.
**இறைவியார் திருப்பெயர்:** பெரியநாயகி, திரிபுரசுந்தரி.
**கோயில் மரம்:** சரங்கொன்றை
**தீர்த்தம்:** கெடிலநதி (தென்கங்கை), ஆல கங்கை, சக்கரத் தீர்த்தம், சூலதீர்த்தம்.
**வழிபட்டோர்:** திலகவதியார், சம்பந்தர், அப்பர், சுந்தரர், கபிலதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, திருமூலர், சேக்கிழார் முதலியோர்
**பாமாலை:** சம்பந்தர், அப்பர், சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார்

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**குண்டைக் குறட்பூதங் குழும வனலேந்திக்**
**கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்**
**வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை**
**விண்ட தொடையலானாடும் வீரட்டானத்தே.** (1-46)

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

**தம்மானை யறியாத சாதியாருளரே**
**சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்**
**கைம்மாவி னுரியானைக் கரிகாட்டிலாட**
**லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்**
**தம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்**
**ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்**
**எம்மானை எறிகெடில வடவீரட்டானத்**
**துறைவானை இறைபோதும் இகழ்வன் போலியானே.**
(7-38)

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம் (16 திருப்பதிகங்கள்)

**கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்**
**ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**
(4-1)

**சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.** (4-2)

### திருத்தலச் சிறப்பு

திருவதிகையானது எண் வீரட்டத் தலங்களுள் சிறப்பான ஒன்றாகும். முப்புரம் எரித்த வீரச் செயல் நிகழ்ந்தத் தலம். திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் காட்டிய தலம். அப்பரின் தமக்கையார் திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு செய்து வந்த திருத்தலம். திலகவதியார் தன்தம்பியாகிய (அப்பர்) மருள்நீக்கியாரை நல்வழிப்படுத்து



மாறு இறைவனை வேண்ட, இறைவன் **"சூலை தந்து ஆட்கொள்வோம்"** என்று பதிலுறைத்த பதி.

சூலை நோயின் துன்பம் தாளப்பெறாத அப்பர் பெருமான், யாருமறியாமல் பாடலிபுத்திரத்தை (திருப்பாதிரிப்புலியூர்)



விட்டு நீங்கி, இங்கு வந்து, தமக்கையாரைக் கண்டு, தொழுது, திருவாளன் திருநீறு தரப் பெருவாழ்வு வந்ததென்று பணிந்து ஏற்று, உருவார அணிந்து, அவர்பின் சென்று, அதிகைப் பிரான் அடிமலர் வீழ்ந்து வணங்கி, **"ஆற்றேன் அடியேன்"** என்று **"கூற்றாயினவாறு"** பதிகம் பாடிச் சூலை நீங்கி **"நாவுக்கரசு"** என்ற பட்டம் பெற்ற அற்புதத்தலம். தென் கங்கை எனப்படும் கெடிலநதி (தல தீர்த்தம்) பக்கத்தில் ஓடுகிறது.

சைவத்துக்குத், திருத்தொண்டுக்கு உறைப்பான திருநாவுக்கரசரை வழங்கியருளிய பெருமைமிகு தலமிதுவே. சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான 'உண்மை விளக்கம்' நூலை அருளிய 'மனவாசகங்கடந்தார்' தோன்றியத் தலம். இத்தலத்தை மிதிக்க அஞ்சி சுந்தரர் அருகிலிருந்த சித்த வடமடத்தில் தங்கியதும், திருவடி தீட்சை பெற்றதும் இத்தலமே.

பல்லவ மன்னனான மகேந்திரவர்மனின் மனத்தை மாற்றிச் சமண் பள்ளிகளை இடித்துக் குணபரவீச்சரம் எழுப்பச் செய்ததும், இத்தலத்தின் பெருமையை பறைசாற்றும் நிகழ்ச்சியாகும். அதிரைய மங்கலம், அதிராஜமங்கலம், அதிராஜமங்கலியாபுரம் என்னும் பெயர்கள் இத்தலத்திற் குரியனவாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. மணவிற் கூத்தனான காலிங்கராயன் என்பவன் இக்கோயிலுக் குப் பொன்வேய்ந்து நூற்றுக்கால் மண்டபம், மடைப்பள்ளி, யாகசாலை ஆகியவற்றை அமைத்து, அம்மையின் திருக் கோயிலையும் கட்டுவித்தான் என்பது கல்வெட்டுச் செய்தி.

### திருத்தல வரலாறு

தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் கடுமையான தவங்கள் செய்து நான்முக னிடம் வரம் பெற்று தங்களை யாராலும் வெல்லவோ கொல்லவோ முடியாது வரம் பெற்றனர். வரத்தினை பெற்ற அவர்கள் தீவினைகள் ஆற்றி அனைவரையும் துன்புறுத்தத்தி னார்கள். அவர்களால் தொல்லையடைந்தவர்கள் ஈசனிடம் முறையிட்டனர். அதன்படி பூமியை தேராகவும், சூரிய சந்திரர்களை தேர் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களை குதிரைகளாகவும், நான்முகனை தேரோட்டியாகவும் மற்ற தேவர்களை எல்லாம் தேருடன் (அதற்கு வைதிகத் தேர்) வரச் செய்தார். சுவாமி மேருமலையை வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அம்பின் நுனியில் தீயாகிய அனல் கடவுளையும் வைத்து அந்த வில்லுடன் தேரில் ஏறினார். அச்சு முறிந்தது.

பிள்ளையாரை வணங்காததால் தான் இப்படி என்று உணர்ந்து, கணபதி பூசை செய்து அவரது அருளை பெற்று தொடர்ந்தனர்.தேரில் வந்த அனைத்து தேவர்களும் தங்களால் தான் அந்த அசுரர்கள் மடியப்போகிறார்கள் என்று நினைத்து கொண்டிருக்க சிவபெருமான் அசுரர்கள் மீது வில் அம்பு எதையும் பயன்படுத்தவில்லை. அசுரர்களை பார்த்து சற்றே சிரித்தார். அவ்வளவுதான்!

உலகமே நடுங்கும்படியாக தீப்பிழம்பு ஏற்பட்டு அவர்கள் மூவரும் சாம்பலாயினர். தங்கள் உதவி இல்லாமலே எம்பெருமான் அவர்களை நிலையற்றவர்களாக்கியதை உணர்ந்து தேவர்கள் வெட்கி தலைகுனிந்தனர். ஒரே சமயத்தில் தேவர்கள் அசுரர்கள இருவரது ஆணவத்தையும் அடக்கினார் ஈசன். பின்பு மூன்று அசுரர்களையும் மன்னித்து இருவரை தனது வாயில் காப்பாளர்களாகவும், ஒருவரை குடமுழா முழக்குபவனாகவும் ஆக்கி கொண்டார். மேற்கூறிய புராண வரலாறே "திரிபுர சம்காரம்" என்று அழைக்கப் படுகிறது.

### திருக்கோயில் அமைப்பு

மிகப்பெரிய கோயிலாகிய வீரட்டானப் பெருமான் உறையும் திருவதிகை வீரட்டானேசுவரர் திருக்கோயில் சுவாமி வீற்றிருக்கும் கருவறையானது தேர்போலப் பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டு, நிழல் பூமியில் சாயாதபடிக் கட்டப்பட்டுள்ளது. கோபுர வாயிலில் இருபுறங்களிலும் அளவற்ற சிற்பங்கள் உள்ளன் வலப்பக் கத்தில் சற்று உயரத்தில் முப்புரம் எரித்த (திரிபுரக்கோலம்) கோலம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

வாயிலின் இருபுறங்களிலும் நடனக்கலைச் சிற்பங்கள் (பரத சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள 108 கரணங்களை விளக்கும் சிற்பங்கள்) அளவிறந்துள்ளன. கோயிலின் உட்புறத்திலுள்ள மற்றொரு பதினாறுகால் மண்டபத்தின் இரு தூண்களில் ஒன்றில் சுப்பிரமணியத் தம்பிரான் (அமர்ந்த நிலை) சிற்பமும், இதற்கு நேர் எதிர்த்தூணில் சிவஞானத் தம்பிரான் (நின்று கைகூப்பிய நிலை) சிற்பமும் உள்ளது. சுப்பிரமணியத் தம்பிரான் என்பவர்தான் இக்கோயிலைத் திருத்திச் செப்பம் செய்தவர் என்றும் இவர் சீடரான சிவஞானத் தம்பிரான்தான் முதன்முதலில் இத்திருக்கோயிலில் அப்பர் பெருமானுக்குப் பத்து நாள்கள் விழா எடுத்துச் சிறப்பித்தார் என்பர்.

இக்கோயிலில் திலகவதியாருக்கு சந்நிதி உள்ளது. அப்பர் சந்நிதியானது அமர்ந்த திருக்கோலம், சிரித்த முகம், தலை மாலை, கையில் உழவாரப்படை தாங்கிய பேரழகு. வீதியில் ஐம்முக சிவலிங்கமும் (பசுபதிநாதர்), வரிசையாகப் பல சிவலிங்கத் திருமேனிகளும் உள்ளன. மூலவர் பெரிய சிவலிங்கத் திருமேனி - பெரிய ஆவுடையார் சிவலிங்கத் திருமேனி பதினாறு பட்டைகளுடன் கம்பீரமாகக்



காட்சியளிக்கின்றது. கருவறை சுதையாலான பணி இதன் முன் பகுதி வளர்த்துக் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றிலும் குடவரைச்சிற்பங்கள்.

இங்கு நாள்தோறும் ஆறுகால பூசைகள் முறையாக நடக்கின்றன. இத்தலத்திலிருந்து 1 கி.மீ. தொலைவு சென்றால் அருள்மிகு சிதம்பரேசுவரர் கோயில் உள்ளது் இதுவே சித்த வட மடம் ஆகும். இப்பகுதி புதுப்பேட்டை என்று வழங்குகிறது. (சித்வடமடத்தைப் பிற்காலத்தில் சித்தாண்டி மடம், சித்தாத்த மடம் என்றெல்லாம் வழங்கினர். இப்போது இப்பகுதி கோடாலம்பாக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.)

மகேந்திரவர்ம பல்லவன் கட்டிய குணபரவீச்சரம் - **"ஆதிமூல குணபரேச்சுரன் கோயில்"** என்றழைக்கப்படுகிறது. இது கோயிலுக்குப் பக்கத்தில் மேற்கே பெரியரோடு கரையில் உள்ளது. சிறு கட்டிடமாக இடிந்த நிலையில், உடைந்துபோன படிமங்களுடன் காணப்படுகிறது. தற்போதுள்ள கோயில் பிற்காலத்தில் பாண்டியர்களால் எழுப்பப்பட்டது. இக்கோயில் மராட்டிய, ஆங்கிலேயர் காலத்தில் போர்க்கோட்டையாகவும் மாறி மாறிப் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றில் அறிகிறோம்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஆரையம்பதி கோயில்குளம் காசிலிங்கேசுவரர் திருக்கோயில்



மட்டக்களப்புத் தேசத்தின் சைவத்தொன்மைக்கும் அதன் பண்பாட்டு மரபுகளின் தனித்துவத்திற்கும் இலக்கணமாய் விளங்கும் திருக்கோயில்களில், இன்று முற்றாக அழிக்கப்பட்டு, 2014ம் ஆண்டு தேசிய தொல்பொருளியல் திணைக்களத்தினால் தேசிய புராதன இடம் என்று அறிவிக்கப்பட்ட ஆரையம்பதி கோயில்குளம் காசிலிங்கேசுவரர் திருக்கோயில், உலகநாச்சி வரலாற்றோடு தொடர்புடைய பண்டைய கோயிலாகும். சைவர்களின் புண்ணியத் திருத்தலமான காசியில் இருந்து கொண்டுவரப்பட்ட இலிங்கம் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டமையால், இங்குள்ள இறைவன் காசிலிங் கேசுவரர் என்ற திருப்பெயருடன் மண்முனைப் பிரதேச மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே மண்முனைப்பற்று பிரதேசத்தவரால் ஆரையம்பதி கோயில்குளம் எனும் கிராமத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ஆரையம்பதி கல்விக்கும் கலைக்கும் புகழ்பூத்த இடமாகும். இவ்வூரின் சிறப்பிற்கு அணிகலன்களாக பிரதான வீதியில் அலங்காரமாக நிறுவியுள்ள உலகநாச்சி, கலிங்கமாகோன், விபுலானந்தர் ஆகியோரின் சிலைகள் தக்க சான்றாகும்.

கோயில்குளம் காசிலிங்கேசுவரர் திருக்கோயிலின் தொன்ம வரலாற்றினை **"மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்"** எனும் இலக்கியத்தினூடாகவும், அக் கோயிலின் அகழ்வுகளின் போது கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளின் ஊடாகவும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும் வரலாறு, கோயில்குளம் காசிலிங்கேசுவரர் கோயிலாக இருக்க வாய்ப்பிருக்கிறது

**"குணசிங்கன் மட்டக்களப்பைக் கலி பிறந்து மூவாயிரத்து ஐந்நூறாம் வருடம் நிர்வகித்து வரும் காலம் கலிங்க ஒறிசா தேசத்தை அரசு புரியும் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தருடைய தசனத்தை எடுத்து நெடுங்கூந்தலுக்குள் மறைவாய் வைத்துக் கைலயங்கிரியிற் குகவம்சத்தார் முற்காலத்தில் வைத்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலக நாதனிடமும் தனது தந்தை குகசேனனிடம் விடைபெற்று வர்த்தகருடைய படகிலேறி மணிபுரத்திலிறங்கி விசய துபீபத்தில் வந்து மேக வண்ணனைக் கண்டு குலம் கோத்திரமெல்லாம் விளங்கப்படுத்திப் புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள்.**

**மேகவண்ணனும் புத்த மதத்திற்கு இனி அபயமில்லை என்று அதிக மகிழ்ச்சி கொண்டு உலக நாச்சினை நோக்கி உமக்கு வேண்டியதைக் கேளுமென்றும், உலகநாச்சியும் அரசனிடம் இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்றீயும் படி வேண்டினாள். அதைக் கேட்ட மேகவண்ணன், மட்டக்களப்பை அரசு புரியும் குணசிங்கன் தனது சினேகிதனாதலால் ஒரு திருமுகம் வரைந்து, அதில் உமது மட்டக்களப்பு உன்னரசகிரி இவைகளில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்று இந்த உலக நாச்சிக்கு கைலஞ்சமாய் ஈந்து கொடுக்கும் படி வேண்டி, உலக நாச்சிக்கு கொடுக்கும் உபகரணங்களையும் இரத்தின மாலையையும் கொடுத்து மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான். குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து சந்ததியுரிமை கொண்டாடி, மட்டக்களப்புக்கு வடபாகமாயுள்ள அம்பிலாந்துறைக்கப்பால் மண்ணேறி முனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித் தூர்த்து மாளிகை உண்டாக்கி கொடுத்தான்.**

**உலகநாச்சியும் குடி வாழ்ந்து சில காலம் சென்றபின் தனது தம்பி சிவநாதனை தந்தையிடத்தில் அனுப்பிக் குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகன் குடும்பங்களைத் தன் அருகாமையிருத்தி இந்த இடத்தில் திருக்கோயில் அமைத்து சிவலிங்கத்தை நிலைப்படுத்தி வணங்கி வந்தனர்"** இவ் வரலாற்றின் எச்சமிச்சம் மகாவம் சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் வரலாற்றோடு ஒட்டிய செய்தியொன்றை தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் குறிப்பிடுகையில் "உலக நாச்சி மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி புரியும் காலத்தில் வேடனொருவன் கொக்கட்டிச்சோலைக் காட்டை வெட்டும் போது, ஒரு கொக்கட்டி மரத்திலிருந்து உதிரம் பாய்ந்தது. இச் செய்தியை உலக நாச்சிக்கு அறிவிக்க, அவள் காசிலிங்கேசுவரர் கோயிலிலிருந்து சூலம், மணி, தீபக்கால் மற்றும் பூசைப் பொருட்களின் திருவோலக்கர் வீர சைவக்குரமாருடன் கொக்கட்டிச் சோலைக்கு வந்து உதிரம் பாய்ந்த இடத்தைப் பார்த்த போது, அவளது கண்ணுக்கு சிவலிங்கம் ஒன்று காட்சி கொடுத்தது. அவ்விடத்தில் கொத்துப் பந்தல் அமைத்து பூசை செய்து திரும்பினாள். அவ்விடத்தில் காலப்போக்கில் ஒரு கோயிலை அமைத்தாள். ஒவ்வொரு வருடமும் காசிலிங்கேசுவரர் கோயிலிலிருந்து கூலங் கொண்டு சென்று கொக்கட்டிச் சோலை தான்தோன்றிசுவரர் கோயில் திருவிழாவை ஆரம்பித்து வைத்தாள். அவள் காலத்தின் பின்பும் அவ்வழக்கம் இருந்தது" என்கின்றார் இவரின் கருத்துப்படி கொக்கட்டிச் சோலை சிவன் கோயிலுக்கு முன்பிருந்த மூத்த கோயில் காசிலிங்கம் என்பது வெளிப்படுகின்றது.

1627ஆம் ஆண்டு **"அசவிடோ"** என்னும் போர்த்துக்கேய தளபதியால் முற்றாக இக்கோயில் அழிக்கப்பட்டு, இன்று ஆரையம்பதியின் தெற்கே இக்கோயில் அமைந்த பகுதி மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. 1988, 1989 ஆம் ஆண்டுகளில் இவ்விடத்தில் மணல் அகழ்வு செய்யப்பட்ட போது ஒரு சிவன் திருக்கோயில் இருந்தமைக்கான ஆதாரம் கிடைத்துள்ளது. செங்கற்களைக் கொண்டு. அகலமாகப் போடப்பட்டுள்ள அத்திபாரத்தின் பாகங்கள், சிறிய படிகலிங்கம், ஐந்து தலை நாகத்தின் கீழ் உள்ள திருமால் சிலை, வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய விளக்கின் உதிரிப்பாகங்கள், காண்டாமணி, 15 அடி அங்குலச் சதுரமும் 12 அடி உயரமும் கொண்ட கருங்கற்தூண்கள், இத் தூண்கள் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. மற்றும் ஒரு வெள்ளைக் கல்லின் செதுக்கப்பட்ட ஆனைமுகனின் புடைப்புச்சிற்பம், கோயிலின் முன்பு நீர்ச்சுனையாகக் காணப்பட்ட தீர்த்தக்குளம் இருந்தமைக்கான தடயங்கள் ஆகிய தொல்லியல் எச்சங்களையும், இங்கு பரம்பரைபரம்பரையாக வாழ்ந்து வரும் கிராம வாசிகளின் வாய்மொழிக்கதைகள் மூலமாகவும், கோயில் குளத்தில் மூர்த்தி, தலம் தீர்த்தம் என்னும் சிறப்புக்களுடன் சிகரத்துடன் கூடிய ஈச்சரம் ஒன்று அமைந்திருந்தது. போர்த்துக்கேயரின் அழிவைத் தொடர்ந்து யாரும் கவனிப்பாரின்றி இறந்து விட்டது என்பது உண்மையாகும். இக் கோயிலின் வரலாறுகள் மேலும் அகழ்வாய்வுகள் மூலம் துலக்கப்பட வேண்டும். அழிந்த திருக்கோயில் அவ்விடத்தில் மீண்டும் உயிர் பெற்று எழ எல்லாம் வல்ல சிவபெருமான் அருளாட்சி புரிய வேண்டும்.



**சைவப்புலவர்**
**சுந்தரமூர்த்தி துஷ்யந்த்**
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



மட்டக்களப்பு சைவக்கோயில்கள் பெரும்பான்மை யானவை வீர சைவப் பண்பாட்டு மரபுத் தாக்கதிற்குட்பட்டு இருந்தவை ஆகும். உலக நாச்சியின் ஆதிக்கத்திற்குட்பட்டு கொக்கட்டிச் சோலை வீராகமச் செல்வாக்கும் வீரசைவநெறி தழுவிய சிவன் கோயிலாகத் தற்போதும் திகழ்கின்றது. அதே போல் கோயில் குளத்தில் அமைந்த காசிலிங்கேசுவரர் கோயிலும் வீரசைவ நெறி தழுவியதாகவே இருந்திருக்கின்றது. இதன் எச்சத்தை இன்று ஆரையம்பதியில் வாழும் மக்களிடையே நிலவும் சமய சமூக பண்பாட்டுச் சடங்குகளில் வீரசைவத் தாக்கம் நிலவி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இக்கோயிலின் பண்டைய இருப்பு பற்றி பேராசிரியர் சி. பத்மநாதன், க. மகேஸ்வரலிங்கம், மா.காசிப்பிள்ளை.



சீ.கோபாலசிங்கம், போன்றோர். தமது கட்டுரையாக்கங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

1627ஆம் ஆண்டில் இக்கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்போது அங்கிருந்த மக்கள் குடிபெயர்ந்து அருகில் ஆரையம்பதிக்குச் சென்றனர். அங்கு சிவ சின்னமான முச்சூலாயுத வழிபாட்டுடன் ஒரு கோயில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னாளில் அங்கு சிவ சின்னமான சூலாயுத வழிபாட்டுடன் ஒரு கோயில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னாளில் அங்கு உருவான செல்வாநகர் குடியேற்றமும், மக்களின் பத்தியாலும், சீர்மிகு சிவனேசுவரர் சிவன் கோயிலாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு நுவரேலியா இலங்காதீசுவரர் கோயில் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி அவர்களால் சிவலிங்கம் நிலைப்படுத்தப்பட்டு, வருடந்தோறும் திருவிழாவும், தைப்பூசமும், சிவனிரவு, திருவாதிரை திருவிழாவும், திருவெம்பாவை ஓதுதல், ஒன்பானிரவு (நவராத்திரி) முதலிய விசேட பூசை வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. இச் சிவனார், கோயில் குளம் காசிலிங்கேசுவரத்தின் மறுவிம்ப எச்சமாக இக் கிராமத்தவர்களால் பார்க்கப்படுகின்றது. தற்போது மண்முனையில் உலக நாச்சியும் காசிலிங்கமும் சிலையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



மங்கலப் புத்தாண்டு சிறப்பு வழிபாடுகள் (14-04-2023)





பங்குனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (05-04-2023)





சித்திரைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடு (17-04-2023)





கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி திருக்கோயில் சங்கு நீராட்டு (17-04-2023)



தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 22ம் நாள் நிறைமதி அன்று (05-05-2023 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org